

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் நகராட்சிக்குட்பட்ட சரக்கல்விளை பகுதியில்,
ஒகி புயலின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 15 ஹெக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த வாழை
மரங்கள் முற்றிலும் சேதமடைந்துள்ளதை இன்று (08.12.2017) மாவட்ட கண்காணிப்பு அலுவலரும்,
தகவல் தொழில்நுட்ப முதன்மை செயலாளருமான திரு. டி.கே. இராமச்சந்திரன் இ.ஆ.ப., மாவட்ட
கூடுதல் கண்காணிப்பு அலுவலரும், தொழில்துறை முதன்மை செயலாளருமான
முனைவர் இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., வேளாண்மைத்துறை முதன்மை செயலாளர்
திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர்
திருமதி ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்
திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர் பார்வையிட்டு, ஆய்வு செய்தனர். உடன்,
வேளாண்மை கூடுதல் இயக்குநர் திரு. கனகராஜ், வேளாண்மை இணை இயக்குநர்
திரு. பாண்டியன், தோட்டக்கலைத் துணை இயக்குநர் திரு. அசோக் மேக்ரின் மற்றும்
அரசு அலுவலர்கள் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டத்தில், ஈசாந்திமங்களம் ஊராட்சி, நங்காண்டி பகுதியில் ஒகி புயலால் பாதிக்கப்பட்டு பயிர்சேதம் அடைந்துள்ள விளைநிலங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான்,இ.ஆ.ப, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலால் சுருளோடு பகுதியில் சேதமடைந்துள்ள அன்னாசி பழ தோட்டங்களை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி இ.ஆ.ப., அவர்கள் இன்று (11.12.2017) பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒகி புயலால் வெள்ளிமலை - கல்படி பகுதிகளில் சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டு பாதிக்கப்பட்ட வாழை தோட்டத்தினை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மை செயலாளர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.பாண்டியன், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு.அசோக்குமார் ஆகியோர் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம், திருப்பதிசாரம் கிராமத்தில் ஓகி புயலினால் பாதிக்கப்பட்ட நெற்பயிர் விளைநிலத்தினை வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் வருவாய்த்துறை இணைந்து மேற்கொள்ளும் இழப்பீடு குறித்த கணக்கீட்டு பணியினை வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.



கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் செண்பகராமன்புதூர் கிராமத்தில் ஒகி புயலால் பாதிக்கப்பட்ட சாமுவேல் என்பவருடைய வாழைதோட்டத்தை கூடுதல் கண்காணிப்பு அலுவலர் மற்றும் மாநில தொழில்துறை ஆணையர் முனைவர்.திரு.ராஜேந்திரகுமார் இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இன்று (06.12.2017) வருவாய்த்துறை அரசு செயலாளர் டாக்டர்.பி.சந்திரமோகன் இ.ஆ.ப., அவர்கள், மரங்கள் மற்றும் பயிர் சேதம் கணக்கெடுக்கும் பணிகளை நேரில் ஆய்வு செய்தார்.